உ

கடவுள் துணை.

# சிதம்பரக்கும்மி.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

108

கடவுள் துணை.

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பரக்கும்மி.

———(*)———

## கற்பகவிநாயகர் - துதி.

சீரமேவுந்தில்லையம்பலத்தில்-முன்பு
சேரக்கும்மித்தமிழ்ப்பாடக்
கார்மேவுமேலைக்கோபுரவாசல்
கற்பகபிள்ளையார்காப்பாமே. (௧)

## முக்குறுணி விநாயகர்-துதி.

சர்க்கரைமோதகந்தேங்காயுங்-கொண்டு
சந்நிதிமுன்பாகத்தான்படைத்து
முக்குறுணிபிள்ளையாரைவேண்டி
முழங்கிக்கும்மியடியுங்கடி. (௨)

## சுப்பிரமணியர் - துதி.

கோலமயிலின்முதுகேறிவந்து
கும்பமுனிக்குவருட்செய்யும்
பாலசுப்ரமண்யபீஜாக்ஷரத்தைப்
பாடிக்கும்மியடியுங்கடி. (௩)

கங்காதேவிக்குக்கைகூப்பியாருங்
கையிலெடுத்துள்ளேபானம்பண்ண
தங்காமற்சிவகாமிசந்நிதி
சார்ந்துகும்மியடியுங்கடி. (௪)

கருதுஞ்சுருதிக்கெட்டாத-சிவ
காமசௌந்தரீவாசலிலே
விருதுபேசிபேசிறுகுழந்தைகள்
வேதம்படிக்குதுபாருங்கடி. (௫)

நாலுபுரத்திலுங்கோபுரமா-மதிற்
நடுவிலெங்கிலுமாளிகையாம்
காலோராயிரங்கொண்டொருமண்டபம்
கட்டியிருக்குதுபாருங்கடி. (௬)

தூயமறைமுதலாராய்ந்து-இங்கே
துலங்கியமூவாயிரவர்
ஞாயம்பொருந்தியதேவசபைவந்து
நாடிக்கும்மியடியுங்கடி. (௭)

சாந்துபொட்டுதளதளென்ன-நல்ல
சந்தனவாடைகுமுகுமென்ன
கூந்தலழகிகளெல்லாருங்காலைக்
குவித்துக்கும்மியடியுங்கடி. (௮)

அஸ்தகடகம்பளபளென்னசொல்லும்
அரைநூண்பாலைதளதளென்ன
விஸ்தாரமாகநின்றுகொண்டுகையை
வீசிக்கும்மியடியுங்கடி. (௯)

கைதனில்விபூதிப்பையுங்கொண்டு-அவர்
கண்டத்தில்ருத்திராட்சமாலைபூண்டு
வைதீகபூசைசெய்கின்றதீட்சதர்
வாழக்கும்மியடியுங்கடி. (௰)

கோவிலுக்குநாலுபேர்களுண்டாம்-அவர்
    குரித்தமுறையாய்பூசைசெய்ய
பாவித்தபின்பவர்வேறொருவர்வசப்
    படுத்துவாரென்றேகும்மியடியுங்கடி. (கக)
ஆண்டுக்குள்ளாரபிஷேகமுண்டாம்-பின்னும்
    அதிலேரெண்டுதிருநாளாம்
வேண்டிவந்தார்கலிதீருமென்றூர்கையை
    விரைந்துக்கும்மியடியுங்கடி. (கஉ)
பூமிப்புகழ்ந்திடுந்தில்லைப்பதி-அது
    பூலோகக்கயிலாசமென்று
தாமரைப்பூவினில்வாழ்கின்றலட்சுமி
    தாயார்சந்நதிபாருங்கடி. (கங)
மூலஸ்தானத்தைக்கண்டாயே-நல்ல
    முத்தியிதுவென்றுகொண்டாயே
காலெடுத்தாடியகீர்த்தசபேசரைக்
    கண்டுதெரிசிப்போம்வாருங்கடி. (கச)
தில்லைமாகாளியோடாடிவர-அவள்
    சித்தங்கலங்கித்தலைகுனிந்தாள்
வெல்லுவரெப்படியென்றொருகாலை
    விண்ணிலெடுத்தார்பாருங்கடி. (கரு)
நெற்றியில்வேர்வைமுத்துதிர்ந்துமெத்த
    நேத்தியதாய்பறந்தோடிவர
பத்தியுடன்பொன்னம்பலவாணனைப்
    பணிந்துக்கும்மியடியுங்கடி. (கசு

தித்தியென்றீசணடம்புரியமெய்த்
தேவர்கள்பூமழைதான்சொரிய
மத்தளங்கொட்டியேகோபாலகிருஷ்ணனை
வாழ்த்திக்கும்மியடியுங்கடி. (கஎ)
சிதம்பரமென்றுசொல்லாமல்-விச்
சித்திரகூடமென்றுசொல்லி
நிதங்கொண்டாடுமையங்கார்கள்வந்து
நின்றிருக்கின்றார்பாருங்கடி. (கஅ)
காணிக்கைகொண்டுவாருங்கடி-இந்தக்
கனகசபையைப்பாருங்கடி
மாணிக்கவாசகர்புகுந்தவாசலை
மதித்துக்கும்மியடியுங்கடி. (ககூ)
அன்னமுடன்பால்தேங்கனியும்-செய்யும்
அபிஷேகமுண்டென்னாளும்
பொன்னம்பலந்தனிற்சந்திரமௌனியைப்
போற்றிகும்மியடியுங்கடி (உ0)
முத்தியளித்திடுஞ்சந்நிதிக்குச்-சொல்லும்
மேளமுந்தாளமுமேதுக்கடி
சத்தம்பெருகியகண்டாமணியோசை
சந்நிதிக்கேர்வையாம்பாருங்கடி. (உக)
புட்டுவடையுந்தேன்குழலும்-வனப்
புத்தருக்குமெய்சம்பாவும்
சட்டப்படிதவறுமலையன்
சந்நிதிக்கேர்வையாம்பாருங்கடி. (உஉ)

சுற்றிவந்துச்சிலைப்பாருங்கடி-நல்ல
ஜோதிமயக்கம்பமொன்பதடி
தத்துவங்கள்தொண்ணூற்றாறுங்கூடிச்
சமைந்தசபையைப்பாருங்கடி. (உ௩)

பாவிகள்கண்ணுக்குச்செப்போடு-உற்றுப்
பார்த்தால்பத்தரைமாற்றுத்தங்கம்
கோவைபாடியமாணிக்கவாசகர்
கோவிலழகையும்பாருங்கடி (உ௪)

அஞ்செழுத்தாலேமதிலுண்டாம்-பர
மானந்தக்கும்பமுமங்குண்டாம்
அஞ்செழுத்துப்படிக்காலேபேர்
மானந்தத்தாண்டவம்பாருங்கடி. (உ௫)

கோடியுகந்தவஞ்செய்தாலு-மிந்தக்
கோவிலைப்பார்க்கமுடியாது
ஆடியபாதத்தைக்கண்டாருக்கிணை
யாரென்றுசொல்லுவோம்பாருங்கடி. (உ௬)

நெற்றியிலேதிருநீறணிந்து-என்றும்
நிஷ்களமாகியசிற்சபையில்
நித்திக்கவேசிவகாமத்தைப்பூசிக்குந்
தீட்சதகூட்டத்தைப்பாருங்கடி. (உ௭)

வெட்டவெளியிற்றிரைதிறந்து-யார்க்கும்
வேதியர்தீபமுங்காட்டிவர
சட்டமுள்ளசிவசிதம்பரமென்று
சாய்ந்துக்கும்மியடியுங்கடி (உ௮)

தில்லைவெளியைக்கண்டேண்டி
....தேகம்பரவசங்கொண்டேண்டி
அல்லலறவாசல்நின்றேண்டிமிக்க
ஆனந்தத்தாண்டவம்பாருங்கடி. (உகூ)
ஆகாசலிங்கத்தைக்கண்டேண்டி-இங்கே
யாருமறியாமல்நின்றேண்டி
ஏகாந்தமாகவிருந்தேண்டிமன
தேக்கந்துலைந்ததுபாருங்கடி. (௩௰)
சித்தஞ்சிதம்பரமாச்சுதடி-முன்
செய்தவினையெல்லாம்போச்சுதடி
சுத்தப்பிரம்மமயமாச்சுதடியதைச்
சொல்லத்தெரியுமோபாருங்கடி. (௩க)
சாதிபேதங்களற்றேண்டி-இந்தச்
சாஸ்திரமனத்தையும்விற்றேண்டி
போதமயக்கந்தொலைந்தேண்டியின்று
புகுந்துகும்மியடியுங்கடி. (௩உ)
நாடுந்தைப்பூரணபூசத்திலே-ஏக
நாயகன்குருவாரத்திலே
ஆடியநாடகபாம்புபுலிதனக
காமென்றுகும்மியடியுங்கடி. (௩௩)
சஞ்சிதகர்மங்கள்விட்டேண்டி-பவ
சாகரத்தையொழித்திட்டேண்டி
சூஸ்திரபாதத்தைதொட்டேண்டிமனங்
கூர்ந்துகும்மியடியுங்கடி. (௩௪)

சொல்லும்பொருளையுமற்றாயோ-முன்
துன்பமனைத்துமொழித்தாயோ
அல்லும்பகலையுமற்றாயோ தில்லை
யானந்தத்தாண்டவம்பாருங்கடி. (௩௫)

விதியெழுத்தைக்கிழித்தாச்சு-முன்
விட்டகுறைவந்துதொட்டாச்சி
மதியமுர்தமுமுண்டாச்சுதென்று
வாழ்த்திக்கும்மியடியுங்கடி. (௩௬)

கோவிலுக்குள்ளேயனேகமுண்டு-அந்தக்
குறிப்பறிந்ததைச்சொல்லுவீரேல்
தேவரகசிபம்பள்ளியறைவந்து
தெளிந்துகும்மியடியுங்கடி. (௩௭)

சண்டேருவரர்தமைவபாருங்கடு-அந்தக்
சந்நிதிக்சேவைகொட்டுங்கடி
மண்டலம்புகழுமழகர்வாசலில்
வாழ்பாடுவோம்வாருங்கடி. (௩௮)

விட்டுக்கவலைகள்விட்டொழியார்மெத்த
வீம்புகள்பேசியேவிண்லேப்பார்
பாட்டைபடித்தாலும்சிதம்பரம்வந்த
பலனதல்லவேபாருங்கடி. (௩௯)

புத்திரபாக்கியமெத்தவுண்டாம்-பசும்
பொன்னுமணிப்பூஷணமுமுண்டாம்
பத்தியுடனகோபாலகிருஷ்ணன்
பணியக்கும்மியடியுங்கடி. (௪0)

சிதம்பரக்கும்மி-முற்றிற்று.